**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.DVC.13/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சுகந்தி | Prosecution | PW-1 Cross |
| Father Name | க/பெ, எழில்ராஜன் | Defence | |
| Village | உப்பங்காடு | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 32/2025 |

**Solemnly affirmed by Tmt.R.Geetha Grade –III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**

**24.09.2025. எதிரிகள் ஆஜர்**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நானும் 1 ம் எதிர் மனுதாரரும் காதலித்து தான் திருமணம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். எங்கள் காதலுக்கு என் பெற்றோர்கள் சம்மதம் தெரிவித்தார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எனது பெற்றோர்கள் எங்கள் காதலுக்கு சம்மதம் தெரிவிக்கவில்லை அதனை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொன்னது போல் 1 ம் எதிர் மனுதாரருக்கு 8 பவுன் தங்க நகையும் வீட்டு உபயோக பொருட்கள் சீர்வரிசை ஜாமான்கள், இருசக்கர வாகனம் வாங்க 80000/- பணம் எதுவும் என் பெற்றோர் வீட்டில் செய்யவில்லை என்று எதிரிகள் கூறுகிறார்கள் என்றால் சரியல்ல.

முதல் விசாரணை பிரமாண பத்திரிகையில் சொல்லி உள்ளபடி சீர்வரிசை சாமான்கள் எதுவும் எங்கள் தரப்பில் வாங்கி தரப்படவில்லை என்றாலும் அப்படி வாங்கித் தந்திருந்தால் அதற்கு உரிய ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் நாங்கள் வாங்கி கொடுத்தது உண்மைதான். உரிய ஆவணங்கள் அவர்கள் வசம்தான் உள்ளது என்பதால் தாக்கல் செய்யவில்லை. உண்மையில் திருமணத்திற்கு எனது பெற்றோர்களுக்கு சம்மதம் கிடையாது என்றாலும் அதனால் அவர்கள் திருமணத்திற்கே வரவில்லை என்றாலும் அதனை மறைத்து அவர்கள் வரதட்சனை கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் பெற்றோர்கள் திருமணத்திற்கு வந்தார்கள். என் பெற்றோர்கள் திருமணத்திற்கு வந்ததற்கு சான்றாக புகைப்படம் இருக்கிறதா என்றால் இல்லை. ஏனெனில் அவர்கள் வந்தவுடன் எதிர் மனுதாரர்கள் அவர்களிடம் பிரச்சனை செய்து உடனடியாக அவர்கள் திரும்ப சென்று விட்டார்கள்.

சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் HMOP 193/2023ல் மனு தாக்கல் செய்யப்பட்டு எனக்கு என் கணவரோடு விவாகரத்து ஆகிவிட்டது என்றால் சரிதான். அது ஒரு தலைப்பட்ச உத்தரவு ஆகும். என் கணவர் தற்போது வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு அந்த பெண்ணோடு வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். அந்த விவாகரத்து மனுவில் என் கணவர் குறிப்பிட்டிருந்த காரணங்களை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அந்த காரணங்கள் உண்மை என்பதால் தான் நான் என் கணவரை எதிர்த்து வழக்கு நடத்தாமல் ஒருதலை பட்சமாக அந்த வழக்கு தீர்ப்பாக விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் அந்த தீர்ப்பை ரத்து செய்ய மனு செய்துள்ளேன். நான் எப்போது மனு செய்தேன் என்றால் என் கணவர் இரண்டாவது திருமணம் செய்வதற்கு முன்பே மனு செய்துவிட்டேன். நான் அவ்வாறு மனு செய்ததால் தான் அவர் உடனடியாக திருமணம் செய்து கொண்டார். நான் சொல்வது பொய் என்றாலும் உண்மையில் எனது தரப்பில் Set Aside மனு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

குடும்ப நல பாதுகாப்பு அலுவலருடன் பிரிவு 18, 20 மற்றும் 22 ன் கீழ் மட்டுமே பரிகாரம் கேட்டு விண்ணப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அதற்கு மாறாக எனது முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில், பிரிவுகள் 18 a, d, e, f, 19 (3), 19(8), 20(b), 22 ஆகியவற்றின் கீழ் நான் நிவாரணம் கேட்டுள்ளது கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. அதேபோல நான் எனது முதல் விசாரணையில் பிரிவு 31ன் கீழ் நிவாரணம் கோரி உள்ளது சட்டப்படி தவறு என்றாலும் அத்தகைய நிவாரணத்தை வழக்கு முடிந்த பிறகு தான் கோர முடியும் என்றாலும் சரியல்ல.

என் கணவரோடு சேர்ந்து வாழ்வதற்கு ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து போலீசார் என் கணவரை அழைத்து சேர்ந்து வாழச் சொல்லி என்னை அனுப்பி வைத்தார்கள். ஆனால் அவர் என்னை அழைத்துச் சென்று இரண்டு நாட்கள் சாப்பாடு போடாமல் வைத்து அனுப்பி வைத்துவிட்டார். அந்த காலகட்டத்தில் என் கணவர் கொடுமை செய்தது பற்றி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. உண்மையில் எனக்கு எந்த கொடுமையும் நடக்கவில்லை என்றாலும் அப்படி நடந்திருந்தால் போலீசார் சட்டப்படியான நடவடிக்கை எடுத்து இருப்பார்கள் என்றாலும் சரியல்ல. நாங்கள் சேர்ந்து வாழ வேண்டும் என்று சொல்லி தான் போலீசார் அனுப்பி வைத்தார்கள்.

நான் என் கணவரோடு சேர்ந்து வாழ்ந்த போது தாம்பத்திய உறவில் ஈடுபடவில்லை என்றால் தவறு. என் கணவர் வெளிநாட்டுக்கு சென்று வேலை பார்த்தார் என்றால் சரிதான். அப்போது அங்கு சம்பாதித்து எனக்கு அவர் பணம் அனுப்பி வைத்தார் என்றால் சரிதான். எவ்வளவு பணம் அனுப்பினார் என்றால் அதிகபட்சம் ரூ.1,50,000/– பணம் அனுப்பினார். நான் சொல்வது தவறு என்றாலும் என் கணவர் எனக்கு வெளிநாட்டில் இருந்து ரூ.6,00,000/– பணம் அனுப்பினார் என்றாலும் சரியல்ல. அவர் அனுப்பி வைத்த பணத்தை நான் வீண் செலவு செய்து செலவழித்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் நியாயமான செலவுகள் தான் செய்தேன். என் பிள்ளைகளை நான் தான் படிக்க வைத்தேன். நான் இன்றைய தேதியில் 1ம் எதிர் மனுதாரரின் சட்டப்படியான மனைவி இல்லை என்பதாலும் நான் தற்போது வேறு ஒரு ஆணுடன் சேர்ந்து வாழ்வதாக 1ம் எதிர் மனுதாரர் சொல்வதாலும் எனக்கு ஜீவனாம்சம் பெறுவதற்கு தகுதி கிடையாது என்றால் சரியல்ல. நான் என் பெற்றோர்கள் உடன்தான் தங்கி இருக்கிறேன். நான் என் முதல் விசாரணை பிரமாண பத்திரிகையில் சொல்லி உள்ளபடி எனக்கு ஜீவனாம்சத் தொகையும், வழக்கு செலவு தொகையும், இருப்பிடத்திற்கான உத்தரவும், கேட்பதற்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. என்னால் உண்மையில் எதிர் மனுதாரர்களுக்கு தான் இழப்பீடு ஏற்பட்டது என்றாலும் ஆகவே அவர்களிடம் இருந்து இழப்பீடு கோர எனக்கு உரிமை கிடையாது என்றாலும் சரியல்ல. ஆகவே என்னுடைய இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**